**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.06/19**

2023-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 05-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திரு.பழனி, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு. எஸ்.விஜி, உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.பழனி, |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த/பெ.லோகநாதன் |
| கிராமம் | - செய்யார் |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

05.12.2023,
**பி.வா.சா.1.**

நான் காப்பீட்டு ஆலோசகராக பணிபுரிகிறேன். எனக்கு சொந்தமான வீடு விக்டெரி தெருவில் உள்ளது. என் வீட்டிற்கு மேற்கு புறம் சோமசுந்தரம் செட்டியார் என்பவர் வீடு உள்ளது. அவர் காலமாகிவிட்டார் என்றால் சரியல்ல. அவர் எங்கோ சென்றுவிட்டார். மேற்படி சோமசுந்தர செட்டியார் காலமாகிவிட்டார் என்றும் நான் அவர் எங்கோ சென்றுவிட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அவரது மனைவி கமலா என்பவரும் காலமாகிவிட்டார் என்று சொன்னால் சரிதான். 2015ம் ஆண்டு பிப்ரவரி மாதம் காலமாகிவிட்டார். சோமசுந்தர செட்டியாருக்கு சொந்தமான சர்வே எண்கள். 75/5 மற்றும் 75/6 என்று சொன்னால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

2) சோமசுந்தர செட்டியாருக்கு சொந்தமான வடக்கில் உள்ள சர்வே எண்.75/6சி1 என்றும் தெற்கில் உள்ள சர்வே எண்.75/33 என மாற்றம் செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய சொத்து சோமசுந்தர செட்டியார் சொத்திற்கு கிழக்கில் உள்ளது. என்னுடைய சொத்தும் இரு சர்வே எண்களாக உள்ளது சர்வே எண்.75/6சி3 மற்றும் 75/6சி4 ஆகும். என்னுடைய சொத்தின் வடக்கில் உள்ள சொத்து சர்வே எண்.75/6சி2 என்றும் தெற்கில் உள்ள சொத்து சர்வே எண்.75/34 என்று சொன்னால் எனக்கு சரியாக நினைவு இல்லை. 34 என்று பார்த்த ஞாபகம் உள்ளது. வாதி தாவா சொத்தை வா.சா.ஆ.1 முன்னிலைக்கு சோமசுந்தரம் வாரிசுகளிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வாதி கிரையம் பெற்றுள்ள சொத்து முன்பகுதி ஒரு அளவும் பின்பகுதி ஒரு அளவு என்றால் சரிதான். என்னுடைய சொத்து முன்பக்கம் ஒரு அளவு, பின்பக்கம் ஒரு அளவு என்று சொன்னால் சரியல்ல ஒரே அளவுதான் உள்ளது. வாதி வீட்டின் முன்பக்க அளவு கிழக்கு-மேற்காக வடக்கு பக்கம் 62 லிங்க்ஸ் ( 39 அடி ) என்றால் சரிதான். பின்புறம் கிழக்கு-மேற்காக தெற்கு பக்கம் அளவு 54 லிங்க்ஸ் (10.2 மீட்டர் அல்லது 33 1/2அடி ) என்றால் சரிதான்.

3) வாதியின் சர்வே எண்ணிற்கு கிழக்கு பக்கம் 107 அடி என்று சொன்னால் இல்லை 200 லிங்கஸ். மேற்கு பக்கம் 110 1/2 அடி என்று சொன்னால் இல்லை 190 லிங்க்ஸ். வாதி கிரையம் பெற்றபோது அவரது இடத்தில் கிழக்கு பக்கம் 2 1/2 அடிக்கு மதில் சுவர் இருந்தது என்று சொன்னால் சரிதான் நான் கிரையம் பெற்றபோதும் என்னுடைய இடத்திலும் மதில் சுவர் இருந்தது. நான் 14.08.2006 பி.வா.சா.ஆ2. முன்னிலைக்கு மகாராஜன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன். நான் கிரையம் வாங்கி வீடு கட்டியபிறகு வாதியின் சொத்து உள்ள பக்கத்தில் காலியிடமாக வைத்திருந்தேன் என்றால் என் வீட்டின் இருபுறமும் காலியிடமாகதான் வைத்துள்ளேன். வீடு கட்டியபோது நான் 15அடிக்கு மதில் சுவர் கட்டினேனா என்றால் நான் கிரையம் பெற்றபோதே மேற்குபுறம் முழுவதுமாக சுற்றுச்சுவர் இருந்தது. எனது கிரையதாரர்

மகராஜான் பி.வா.சா.ஆ.3 முன்னிலைக்கு ஜெயராமன் மற்றும் சிலரிடமிருந்து 07.02.1997ல் கிரையம் பெற்றுள்ளார். அதற்கு முன்னர் முனுசாமி என்பவர் 25.09.1971ல் சின்னக்குட்டி கவுண்டரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார். பி.வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தின்படி 12 செண்ட் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் ஜக்குபந்தியில் சோமசுந்தரம் வீட்டு மனைக்கு கிழக்கு முனுசாமி கவுண்டர் நிலத்திற்கு தெற்கு என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மேற்படி ஜக்குபந்தியில் சாலை என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

4) பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி வடக்கு பக்கம் 62 லிங்க்ஸ் என்றும் தெற்குபக்கம் 54 லிங்க்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பத்திரத்தில் குறிப்பிட்டிருக்கும் 54 லிங்க்ஸ் என்பது 10.2 மீட்டர் என்று சொன்னால் சரியல்ல 39அடி தான். நான் சொல்வதுபோல் 54 லிங்க்ஸ் என்பது 39அடி இல்லையென்றும், 33 அடிதான் உண்மையான அளவு என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சோமசுந்தரம் மற்றும் சிலர் சேர்ந்து தெருவிற்காக வழிவிட்ட விவரம் எனக்கு தெரியும். நானும் சாலைக்காக கிரையம் கொடுக்கும்போது வழிவிட்டுள்ளேன். பத்திரம் குறித்து எனக்கு தெரியும் ஆனால் அதன் அளவுகள் மட்டும் எனக்கு தெரியாது. அந்த ஆவணம் குறித்து எனக்கு வழக்கு நிலுவையின்போதுதான் தற்போது தெரியும். **(மேற்படி 16.01.1972 தேதியிட்ட ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் 12 செண்ட் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளதாக காணப்படுகிறது. மேற்படி சாலைக்கு விடப்பட்ட இடத்தை குறைக்காமல் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் எனக்கு கிரையம் கொடுக்கப்பட்டபோது அந்த சாலைக்கான இடத்தை விட்டுவிட்டுதான் எனக்கு கிரையம் கொடுக்கப்பட்டது.

5) பி.வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் 12 செண்ட் கிரையம் கொடுக்கப்பட்டதாகதான் கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதேபோல் ஜக்குபந்தியில் சாலைக்கான இடம் குறித்து காட்டப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நான் 14.08.2006ல் பி.வா.சா.ஆ.13ன்படி மகாராஜன் என்பவரிடமிருந்து சொத்தை கிரையம் பெற்றேன். 12 செண்ட் என கிரையம்கொடுக்கப்பட்டு வந்த சொத்து என் பத்திரத்தில் அடி கணக்காக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பதிவு அலுவலகத்தில் சொன்னதுபோல் எழுதினோம். அதில் ஜக்குபந்தி வீதிக்கு தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பத்திரத்தில் கிழக்கு-மேற்கு, வடக்கு-தெற்கு ஆகிய அனைத்து அளவுகளும் அடி கணக்கில் எழுதியுள்ளோம். கிழக்கு-மேற்கு இருபுறமும் 39 1/2 அடி என குறிப்பிட்டுள்ளோம் என்று சொன்னால் கிழக்கு-மேற்கு வடபுறத்திலும் தென்புறத்திலும் 39 1/2 அடிதான். எனது முன்கிரைய ஆவணங்களில் கிழக்கு-மேற்கு தென்புறத்தில 54 லிங்க்ஸ அதாவது 33அடிதான் ஆனால் நாங்கள் 39 1/2 அடி என அதிகப்படியாக காட்டி பொய்யாக கிரைய பத்திரம் எழுதியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

6) எனது கிரைய ஆவணத்தின் அளவுகளை வைத்து சதுர அடியாக குறிப்பிட்டுள்ளேன. தெருவிற்கு விட்ட சதுர அடியை எனது கிரைய பத்திரத்தில் குறைக்கவில்லை என்று சொன்னால் 680 சதுர அடி தெருவிற்கு விட்டுள்ளேன். உண்மையில் தெருவிற்கு 900ம் சதுர அடிதான் முன் விடப்பட்டுள்ளது என்றும், நான் எனது ஆவணத்தில் 680 சதுர அடி என குறைத்து குறிப்பிட்டு கிரைய பத்திரம் எழுதிக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது யூ.டி.ஆர்-ன்படி பட்டா வழங்கப்பட்டுள்ளது. எனது பட்டாவை இந்நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் நான் சொல்வதுபோல் பட்டா இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. யூ.டி.ஆர்-ன்படி

பட்டா தெற்குபுறத்தில் 10.2 மீட்டர் என கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு. எனக்கு தெற்கு புறத்தில் எவ்வளவு மீட்டர் என குறிப்பிட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் மீட்டர் அளவு தெரியவில்லை 39 1/2 அடி என குறிப்பிட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது. வாதி வீடுகட்டிக்கொண்டிருந்தபோது வாதி ஊரில் இல்லாத காலத்தில் நான் தாவா பி.அட்டவணை சொத்தை ஆக்கிரமிப்பு செய்து 15அடி உயர்த்தி சுற்று சுவர் கட்டியுள்ளேன் என்று சொன்னால் அது முற்றிலும் தவறு. ஏற்கெனவே இருந்த சுற்று சுவரை நான் 7அடி அளவிற்கு மட்டுமே உயரப்படுத்தி கட்டியுள்ளேன்.

7) இதுசம்மந்தமாக வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. நான்தான் காவல் நிலையத்தில் வாதி எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய வருவதாக புகார் அளித்தேன். வாதி நான் ஆக்கிரமிப்பு செய்த காரணத்தினால்தான் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றும் 10.02.2018ல் வாதி மணல் திருடுவதாக அவர்மீது புகார் கொடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி எனது இடத்தில் சன்ஷேட் வளர்த்தி கட்டியதால் எனது இடத்தை ஆக்கிரமிப்பதாக புகார் கொடுத்தேன். புகாரினை நான் டி.ஜி.பி-க்கு புகார் அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக 15.10.2018ல் காவல் துணை கண்காணிப்பாளர் என்னையும் வாதியையும் அழைத்து விசாரணை மேற்கொண்டார். விசாரணையில் நான் ஆக்கிரமிப்பு செய்யமாட்டேன் என்று எழுதிகொடுத்துவிட்டு வந்தேன் என்று சொன்னால் சரியல்ல பொய்.

8) பிராதுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் கண்டுள்ள தாவா பி அட்டவணை சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய இடத்தில்தான் சுற்றுசுவர் கட்டியுள்ளேன். நான் ஆக்கிரமிப்பு செய்துள்ள காரணத்தினால்தான் வாதி தாவா பி-அட்டவணை சொத்தை விளம்புகை செய்யகோரியும்,

சுவாதீனம் அளிக்ககோரியும் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எ்ண.224/2018 என்ற வழக்கினை மகாராஜன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற ஆவணத்தின்பேரில் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு தனது அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். நில அளவையர் உதவியுடன் வந்து தாவா சொத்தை 07.08.2022ல் அளவீடு செய்தார். ஆனால் முறையாக அளவீடு செய்யவில்லை. தாவா சொத்திற்கும், எனது சொத்திற்குமான புல வரைபடத்தை வழக்கறிஞர் ஆணையர் தனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளார். எனது சொத்தும், வாதியின் சொத்தும் தெற்கு புறத்தில் 10.2 மீட்டர் என புல வரைபடத்தில் கண்டுள்ளது என்று சொன்னால் அதில் உள்ள அளவு தவறானது.

9) வாதியின் சொத்தை வழக்கறிஞர் ஆணையர் அளவீடு செய்தபோது 9.2 மீட்டர் தெற்குபுறத்தில் உள்ளதாக 1 மீட்டர் குறைவாக உள்ளதாக ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. அதேபோல் எனது சொத்தும் 10.2 மீட்டர்தான் நான் 12.2 மீட்டர் என அதிகபடுத்தி கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சொத்தின் கிழக்கு புறத்தில் பாஸ்கர் என்பது வீடு உள்ளது. மேற்படி பாஸ்கர் என்பவரது இடமும். புலவரைபடத்தின்படி 10.2 என உள்ளது என்றும் 10.8 மீட்டர்தான் வரவேண்டும் என்றும் நான் மேற்படி பாஸ்கர் என்பவர் இடத்திலும் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பாஸ்கருக்கும் எனக்கும் இடம் சம்மந்தமாக பிரச்சனை எதுவும் இல்லை.

10) நான் வாதியின் இடத்தில் ஒரு மீட்டர் அதிகபடியாக ஆக்கிரமிப்பு செய்துள்ளதால்தான் வாதி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை. எனது புல எண்,

சர்வே எண்.75/6சி2 மற்றும் சர்வே எண்.75/34தான் என்றும் ஆனால் ஆவணத்தில் தவறாக குறிப்பிட்டு கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா பி.அட்டவணை சொத்து ஆவண படியும், பட்டா படியும் வாதிக்கு சொந்தமனா சொத்து என்றும் எனவே வாதி கோரியவாறு விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய 10 வருடம் கழித்துதான் வாதி கிரையம் பெற்றுள்ளார். பி.வா.சா.அ.13 கிரைய ஆவணம் நான் தவறாக ஏற்படுத்திக்கொண்டது என்றும், அதன் அடிப்படையில் எனக்கு எந்த உரிமையும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. உயில் சாசனத்தின்படி என்னுடைய ஆவணம் சரியானதுதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின்படியும, சோமசுந்தரத்தின் வாரிசுகளிடமிருந்துதான் வாதி தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.4 சான்றாவணத்தின்படி தெற்குபுறத்தில் 54 லிங்க்ஸ் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எனது பழைய ஆவணங்களை மறைத்து தெற்குபுறம் 62 லிங்க்ஸ என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

11) நான் தாவா பி-அட்டவணை சொத்தை இடித்து வாதிக்கு சுவாதினம் ஒப்படைக்க கடமைபட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா பி-அட்டவணை சொத்து என்னுடையது என்று நான் சொல்வது தவறானது என்று சொன்னால் சரியல்ல. தாவாபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.14 ஆவணத்தில் நான் தாக்கல் செய்துள்ள அனைத்தும் சுற்றுசுவர் இடிப்பதற்கு முன்பு எடுக்கப்பட்ட புகைபடம் என்றும், தற்போது தாவா சொத்தின் நிலைக்கான புகைபடம் இல்லையென்றும் எனவே அந்த ஆவணம் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் வாதியின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டு வாதி எனக்கு ரூ.10 லட்சம் இழப்பீட்டு தொகை தரவேண்டும் என்று கோரியுள்ளது தவறானது என்றும், நான்தான் வாதிக்கு இழப்பீடு செலுத்த வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.